முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேலம்

நாள்: 25.06.2025 அ.வ.எண்.170/2022 வா.சா.1–கண்ணன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. 1, 2 பிரதிவாதிகள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை, ஒரே ஊர்க்காரர்கள் என்றால் சரிதான்.

2. அரசு கலைக் கல்லூரியில் நான் 20 வருடங்களாக பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் தவறு, கௌரவ விரிவுரையாளராக 20 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன்.

3. எனக்கும், 1 , 2 பிரதிவாதிகளுக்கும் இடையே உள்ளதாக சொல்லும் கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக யார் முதலில் காவல்நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் எனது மனைவி அளித்தார். நான் சொல்வது தவறு என்றும், எனது சகோதரி ஜெயா என்பவர் தான் புகார் அளித்தார் என்றும், அதன் பேரில் தான் விசாரணை நடைபெற்றது என்றால் தவறு. எனது சகோதரி கொடுத்த புகாருக்கு முன்பு 2017 ம் ஆண்டு எனது மனைவி புகார் கொடுத்தார்.

4. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 சம்மந்தப்பட்ட இரு புகார்களும் பொது தடம் சம்மந்தமாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

5. எனது மனைவி கொடுத்த புகார் குறித்தும், எனது சகோதரி கொடுத்த புகார் குறித்தும் போலீசார் விசாரணை செய்து முடித்து வைத்துள்ளார்கள் என்றால் சரிதான், அவர்களுக்கு சாதகமாக முடிவு செய்துள்ளார்கள்.

6. எனது மனைவி கொடுத்த புகாரை 3, 4 பிரதிவாதிகள் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

7. எனது சகோதரி கொடுத்த புகார் சம்பவம் குறித்து 16–08–2021 அன்று காலை 11.10 மணியளவில் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான், தேதி எனக்கு ஞாபகமில்லை.

8. எனது சகோதரி ஜெயா சிகிச்சைக்கு சேர்வதற்கு முன்பே அதே தேதியில்

காலை 9.15 மணியளவில் 1ம் பிரதிவாதி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான்.

9. இரண்டு பேர் கொடுத்த புகாரையும் பெற்று தனித்தனியாக புகார் மனு ஏற்பு சான்று கொடுத்து இருவரையும் விசாரித்தார்கள் என்றால் சரிதான், மறுநாள் விசாரித்தார்கள். அந்த இரண்டு புகாரும் எனக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் இடையே இருந்ததாக சொல்லும் கொடுக்கல், வாங்கல் பற்றியது அல்ல என்றால் சரிதான்.

10. 3, 4 பிரதிவாதிகள் எனது சகோதரிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையேயான அடிதடி பிரச்சனை குறித்து தான் விசாரணை செய்தார்கள் என்றும் இவ்வழக்கு கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக எவ்வித புகாரும் கொடுக்கப்படவில்லை என்றும் அது குறித்து 3, 4 பிரதிவாதிகள் விசாரணையும் செய்யவில்லை என்றால் தவறு. எனவே 3, 4 பிரதிவாதிகள் மீது நான் பொய்யான சங்கதிகளை இவ்வழக்கில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆகவே 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.